டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 24.09.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 081 | Madurai | Online Edition

# தூய்மையே சேவை இயக்கத்தில் ஊழியர்களை ஊக்குவிக்கிறது உரத்துறை

புது தில்லி, செப்.23

நாடு தழுவிய தூய்மையே சேவை இயக்கம், 17.9.26 முதல் 2.10.26 வரை கடைபிடிக்கப்படுகிறது. இந்தக் காலத்தில், நிறுவன முன்முயற்சிகளைச் சீரமைக்கவும், களத்தில் அதன் தாக்கத்தை அதிகரிக்கவும், உரத் துறையின் பொருளாதார ஆலோசகர் குந்தல் சென்சர்மா தலைமையில் இன்று, (செப்டம்பர் 22, 2026) காலை 11 மணிக்கு ஒரு விரிவான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், உரத் துறை அதிகாரிகள், உரத் தொழில் ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதிகள், அனைத்து உரப் பொதுத்துறை நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், கூட்டு முயற்சி/தனியார் உர நிறுவனங்களைச் சேர்ந்த மூத்த நிர்வாக அதிகாரிகள் உட்பட, இத்துறையைச் சேர்ந்த முக்கிய தரப்பினர் பங்கேற்றனர்.

தூய்மையான, பசுமையான, பொறுப்புமிக்க நிர்வாகச் சூழலை உருவாக்கும் நோக்கத்தில் செயல்படுத்தப்படும் தூய்மையே சேவை இயக்கத்தின் வெற்றியானது, ஊழியர்களின் திறன் வாய்ந்த பங்கேற்பைச் சார்ந்துள்ளது என உரத்துறை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அடுத்த தலைமுறை வரிசைமுறை தரவு பகுப்பாய்வு குறித்த செய்முறைப் பயிற்சித் திட்டம் தொடக்கம்

கோயம்புத்தூர், செப்.23

தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தகவலியல் துறை, தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித்தொழில்நுட்ப மையத்தின் சார்பில் அடுத்த தலைமுறை சீக்வென்சிங் (NGS) தரவுகளின் பகுப்பாய்வு குறித்த நடைமுறை பயிற்சி நிகழ்ச்சி 22.09.26 முதல் 25.09.26 வரை நடைபெறுகிறது.



இப்பயிற்சித் திட்டத்தில் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள பல்வேறு கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டுள்ளனர். இதில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் (TNAU), எலிசபெத் க்ரீக் தோட்டக்கலைத் தொழில்நுட்ப மையம், வார்விக் பல்கலைக்கழகம், இங்கிலாந்து, ARM ஆய்வகம், ICAR தேசிய வாழை ஆராய்ச்சி மையம், குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி, டெல்லி பல்கலைக்கழகம், ஸ்ரீ சக்தி கைலாஷ் மகளிர் கல்லூரி மற்றும் CEGS அறக்கட்டளை கிழக்குத் தொடர்ச்சி மலைகள் ஆய்வு மையம் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சித் திட்டம் தொடக்க விழாவுடன் தொடங்கியது. தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தகவலியல் துறையின் பேராசிரியரும் தலைவருமான முனைவர் L.அருள் வரவேற்புரையாற்றினார். தனது உரையில், இப்பயிற்சித் திட்டத்தின் நோக்கம் மற்றும் நவீன உயிரியல் ஆராய்ச்சியில்

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

NGS தொழில்நுட்பங்களின் வளர்ந்து வரும் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். தொடர்ந்து, பங்கேற்பாளர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

முனைவர் ந.செந்தில், இயக்குநர், CPMB&B, தொடக்க உரையாற்றினார். தனது உரையில், மரபணுத் தரவுகளின் அதிவேக வளர்ச்சி மற்றும் மேம்பட்ட வரிசை முறை தொழில்நுட்பங்கள் மற்றும் தரவு விளக்கக் கருவிகளில் திறன் பெறுவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

முனைவர் வி.பாலசுப்பிரமணி, தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், TNAU, சிறப்புரையாற்றினார். தனது உரையில், NGS தொழில்நுட்பங்களின் முக்கியத்துவம், அவற்றின் பல்வேறு பயன்பாடுகள் மற்றும் நவீன அறிவியல் ஆராய்ச்சியில் அவற்றின் தாக்கம் குறித்து, நடைமுறை சார்ந்த எடுத்துக் காட்டுகளுடன் எடுத்துரைத்தார்.

தொடக்க விழா முனைவர் ம.ஜெயகாந்தன், உதவிப் பேராசிரியர், தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தகவலியல் துறை, நன்றியுரையுடன் நிறைவுற்றது.

நான்கு நாட்கள் நடைபெறும் இப்பயிற்சித் திட்டத்தில், NGS தரவு பகுப்பாய்வு மற்றும் கணினி வழி அணுகு முறைகள் குறித்த செய்முறைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இதன் மூலம், உயர்-திறன் வரிசைமுறைத் தரவுகளை கையாளுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் விளக்குதல் ஆகியவற்றில் பங்கேற்பாளர்களுக்குத் தேவையான திறன்கள் மேம்படுத்தப்படுகின்றன.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**






அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

எல்லா நாளும்
தள்ளுபடி உண்டு
உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

## வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**46. சுக்கு மிளகு சூப்**

**தேவையான பொருட்கள்**

சுக்கு — 1 டீஸ்பூன்

மிளகு — 1 டீஸ்பூன்

பூண்டு — 4 பல்

சீரகம் — ½ டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

**செய்முறை**

அனைத்தையும் இடித்து தண்ணீரில் கொதிக்க வைத்து வடிகட்டி பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நூற்றாண்டு பழமையான நிரந்தர உரமிடுதல் ஆய்வு மற்றும் நீண்ட கால உர ஆய்வு

கோயம்புத்தூர், செப்.23

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இயற்கை வள மேலாண்மை இயக்குநரகத்தின் இயக்குநர் முனைவர் எஸ்.கார்த்திகேயன், கோவையில் உள்ள பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள நூற்றாண்டு பழமையான 'நிரந்தர உரமிடுதல் ஆய்வு' (PME) மற்றும் 'நீண்ட கால உர ஆய்வு' (LTFE) ஆகிய களங்களை நேரில் பார்வையிட்டார்.

1909-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட PME ஆய்வானது, உலகின் மிக நீண்ட காலமாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் கள ஆய்வுகளில் ஒன்றாகும். நீண்டகால உர ஆய்வு (LTFE) 1972-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்த ஆராய்ச்சித் திடல்கள் பல்கலைக்கழகத்தின் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

தொடர்ச்சியான பயிர் சாகுபடியின் கீழ், ஊட்டச்சத்து மேலாண்மை முறைகள், பயிர் உற்பத்தித்திறன், மண் வளம், மண்ணின் கரிம கார்பன் மாற்றங்கள், நுண்ணுயிர் பண்புகள் மற்றும் ஒட்டு மொத்த மண் தரம் ஆகியவற்றில் ஏற்படுத்தும் தாக்கங்களை மதிப்பிடுவதற்கு இந்த ஆய்வுகள் ஒரு தனித்துவமான நீண்ட கால ஆராய்ச்சி தளத்தை வழங்குகின்றன.

மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஆர்.கே.காளீஸ்வரி, இந்த ஆய்வுகளின் நோக்கங்கள், பயிர் செயல்பாடு மற்றும் தற்போதைய ஆராய்ச்சி நடவடிக்கைகள் குறித்து இயக்குநருக்கு விளக்கினார். மேலும், பயிர் உற்பத்தித்திறன், மண் வளம், கார்பன் சேமிப்பு, மண்ணின் உயிரியல் பண்புகள் மற்றும் மண் தரம் ஆகியவற்றில் ஊட்டச்சத்து மேலாண்மை முறைகளின் நீண்டகால தாக்கங்களைப் புரிந்து கொள்வதில் PME மற்றும் LTFE ஆய்வுகளின் அறிவியல் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்தார்.




முனைவர் டி.ஜெயந்தி, பேராசிரியர் மற்றும் முனைவர் ஜி.ஸ்ரீதேவி, உதவிப் பேராசிரியர் (மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை) ஆகியோர் சமச்சீர் உரமிடுதலின் முக்கியத்துவத்தை விளக்கினர். ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை (INM) முறையானது, மண்ணின் சாதகமான இயற்பியல் பண்புகளைப் பராமரிப்பதோடு, மண்ணின் கரிம கார்பன் சேமிப்பு மற்றும் ஒட்டுமொத்த மண் தரத்தை மேம்படுத்தி, நிலையான பயிர் உற்பத்தித்திறனுக்குப் பங்களிக்கிறது என்பதை அவர்கள் சுட்டிக்காட்டினர்.

உரப்பயன்பாட்டைச் சீராக்குவதற்கு, மண் பரிசோதனை அடிப்படையிலான 'இலக்கு விளைச்சல் அணுகுமுறை'யின் முக்கியத்துவத்தையும் அவர்கள் வலியுறுத்தினர்.

இந்த அணுகுமுறையானது மக்காச்சோளப் பயிருக்குத் தேவைப்படும் பொட்டாசியம் அளவை சுமார் 40 சதவீதமும், சூரியகாந்திப் பயிருக்குத் தேவைப்படும் பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் அளவுகளை 40 சதவீதத்திற்கும் அதிகமாகவும் குறைக்கும் திறன் கொண்டது. இதன் மூலம் சாகுபடிச் செலவைக் குறைக்க உதவுகிறது.

இவ்வாய்வுடன் தொடர்புடைய ஆராய்ச்சி உதவியாளர் முனைவர் பி.கோகிலா மற்றும் ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநர் எஸ்.ராஜேஷ் குமார் ஆகியோரும் இப்பார்வையின் போது உடனிருந்தனர். இயற்கை வள மேலாண்மை இயக்குநரகத்தின் பேராசிரியர் முனைவர் வி.தவமணி இத்தொழில்நுட்ப நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

இயற்கை வள மேலாண்மை இயக்குநரகத்தின் இயக்குநர் முனைவர் எஸ்.கார்த்திகேயன், தீவிர வேளாண்மை முறைகளில் பயிர் உற்பத்தித்திறனை நிலைநிறுத்துவதற்கும், மண் ஆரோக் கியத்தைப் பேணுவதற்கும் மற்றும் மண் தரத்தை மேம்படுத்து

வதற்கும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, சமச்சீர் உரமிடுதல் மற்றும் மண் பரிசோதனை அடிப்படையிலான உரப் பரிந்துரைகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

மேலும், விவசாயிகளுக்குஏற்ற நிலையான ஊட்டச்சத்து மேலாண்மை நடைமுறைகளை உருவாக்குவதற்கும் ஊக்குவிப்பதற்கும் தேவையான அறிவியல் பூர்வமான சான்றுகளைப் பெறுவதில், PME/LTFE போன்ற நீண்டகாலக் கள ஆய்வுகளின் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்தார்.



# இயற்கை வழியில் சுழற்சி முறையில் கீரை சாகுபடி



பொதுவாக கீரை சாகுபடிக்குப் பட்டம் கிடையாது. எப்போது வேண்டுமானாலும் விதைக்கலாம். ஆனால் அதிக மழை பொழியும் சமயத்தில் விதைப்பைத் தவிர்க்க வேண்டும். விதைக்கப்போகும் நிலத்தின் அளவை முடிவு செய்து, தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்;தை நன்கு உழுது, 6 அடி நீளம் 4 அடி அகலத்தில் பாத்திகள் எடுக்க வேண்டும். ஒரு பாத்திக்கு 10 கிலோ வீதம் தொழுவுரத்தைத் தூவி சமப்படுத்த வேண்டும். பிறகு ஒவ்வொரு பாத்தியிலும் ஒரு கிலோ வீதம் கனஜீவாமிர்தம் என்ற கணக்கில் 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

விதைத்த 3-ம் நாள் விதைகள் முளைவிடும். அவ்வப்போது களைகளை அகற்றி வர வேண்டும். நிலத்தின் ஈரப்பதத்தைப் பொறுத்துப் பாசனம் செய்தால் போதும். ஒவ்வொரு பாசனத்தின் போதும், ஒரு பாத்திக்கு 500 மில்லி ஜீவாமிர்தம் என்ற அளவில் தண்ணீரில் கலந்துவிட வேண்டும். அரைக்கீரை, சிறுகீரை, தண்டுக் கீரை ஆகிய மூன்றும் 22 முதல் 30 நாட்களுக்குள் அறுவடைக்கு வரும். சிறுகீரை, தண்டுக்கீரை இரண்டும் ஓர் அறுவடை வகைக் கீரைகள். அதனால் அவற்றை வேரோடு பிடுங்கிவிட வேண்டும். பிறகு பாத்திகளில் உள்ள மண்ணைக் கொத்தி 15 நாட்கள் ஆறவிட்டு மீண்டும் விதைக்கலாம். அரைக் கீரை, பாலக்கீரை இரண்டும் மறுதழைவு வகைக் கீரைகள். அரைக்கீரையை 20 நாட்கள் இடைவெளியில் ஏறத்தாழ 10 முறை அறுவடை செய்யலாம். பாலக் கீரையை 15 நாட்கள் இடைவெளியில் ஏறத்தாழ 30 முறை அறுவடை செய்யலாம்.

ஓர் அறுவடை கீரைகளைத் தொடர்ந்து சில பாத்திகளில் விதைத்துக் கொண்டே வந்தால் சுழற்சி முறையில் தினமும் கீரைகள் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

மறு தழைவு கீரைகளை மகசூல் காலத்தைக் கணக்கிட்டு விதைத்தால் அவற்றையும் சுழற்சி முறையில் அறுவடை செய்ய முடியும். கீரை வயல், வரப்புகளில் 10 அடிக்கு ஒரு செண்டு மல்லி செடியை வைத்தால் பூச்சிகள் தொல்லை இருக்காது. அதையும் தாண்டி, கீரை வயலில் பூச்சிகள் தென்பட்டால் அக்னி அஸ்திரம் போன்ற கரைசல்களைத் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**ஜீவாமிர்தம் தயாரிக்கும் முறை**

10 கிலோ பசுஞ்சாணம், 10 லிட்டர் நாட்டுப் பசு மாட்டுச் சிறுநீர், ஒரு கிலோ பயறு மாவு (கடலைப்பருப்பு, துவரம் பருப்பு, உளுந்து, பாசிப்பயறு) ஆகியவற்றில் ஏதாவதொன்றின் மாவு, ஒரு கிலோ நாட்டுச் சர்க்கரை, சாகுபடி செய்துவரும் வயலில் உள்ள மண் கைப்பிடி அளவு ஆகியவற்றை ஒரு பிளாஸ்டிக் டிரம்மில் இட்டு 200 லிட்டர் தண்ணிர் ஊற்றி இரண்டு நாட்கள் நிழலில் வைக்க வேண்டும். காலை மதியம் மற்றும் மாலை என மூன்று வேளையும், கடிகாரச் சுற்றுப்படி கலக்கி வந்தால், ஜீவாமிர்தம் தயார். இதை வளர்ச்சி ஊக்கியாகப் பயன் படுத்தலாம்.

**அக்னி அஸ்திரம் தயாரிக்கும் முறை**

**தேவையானவை**

சோற்றுக் கற்றாழை – 3 கிலோ

பிரண்டை – 3 கிலோ

வேப்பிலை – 2 கிலோ

பப்பாளி இலை – 2 கிலோ

நொச்சி இலை – 2 கிலோ

ஆமணக்கு இலை – 2 கிலோ

ஊமத்தை இலை – 2 கிலோ

எருக்கு இலை – 2 கிலோ

ஆவாரை இலை – 2 கிலோ


சுண்டைக்காய்ச் செடி இலை – 2 கிலோ

ஆடு தீண்டா பாலை இலை – 2 கிலோ

இஞ்சி – ஒரு கிலோ

பூண்டு – அரை கிலோ

பச்சை மிளகாய்–2 கிலோ



ஒரு பாத்திரத்தில் அனைத்து இலைகளையும் பொடிப் பொடியாக வெட்டிப் போட வேண்டும். இஞ்சி, பூண்டு, மிளகாய் ஆகியவற்றை உரலில் இடித்து அவற்றுடன் சேர்க்க வேண்டும். அவை மூழ்கும் அளவுக்கு மாட்டுச் சிறுநீரை ஊற்றி பாத்திரத்தில் மூடி அடுப்பில் வைத்து கொதிக்க விட வேண்டும். நன்கு கொதித்ததும் இறக்கி 20 நிமிடங்கள் ஆற வைக்க வேண்டும். மீண்டும் அடுப்பில் ஏற்றி கொதிக்க வைக்க வேண்டும். இப்படி நான்கு முறை கொதிக்கவைத்து இறக்கி நிழலில் வைத்து, மூடியால் இறுக மூடி அதன் மேல் துணியை வைத்து காற்றுப் புகாதவாறு இறுக்கமாகக் கட்டி விட வேண்டும். இரண்டு நாட்கள் கழித்து இக்கரைசலை வடிகட்டி 10லிட்டர் தண்ணீருக்கு 300 மில்லி என்ற கணக்கில் கலந்து தெளிக்கவேண்டும்.

இவ்வாறு உடலுக்கு ஆரோக்கியம் தரும் கீரை வகைகளை இயற்கையான முறையில் சாகுபடி செய்து உயர் விளைச்சலைப் பெறுவதற்கு விதைப்பரிசோதனை செய்வது அவசியம். கீரை சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்களிடமுள்ள கீரை விதை களில் 50 கிராம் விதை மாதிரிக்காக எடுத்து மதுரை, நாகமலைப் புதுக்கோட்டையில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் ரூ.80 கட்டணம் செலுத்தி விதை பரிசோதனை செய்து விதை முளைப்புத்திறனை அறிந்து விதைத்து பயனடையுமாறு மதுரை விதைப்பரிசோதனை அலுவலர் ம.மகாலட்சுமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் பெரி.இராமலெட்சுமி, சி.கமலா ராணி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# மக்காசோள சாகுபடி தொழில்நுட்பங்கள்



சமீப நாட்களாக தென் மாவட்டங்களில் மானாவாரி கரிசலில் மழை பெய்வதை முன்னிட்டு மக்காசோள விதைப்பு (நடவு) பணி தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இன்னும் சில இடங்களில் விதைப்பிற்கான ஆயத்த பணிகளை விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்த தருணத்தில் உயர் விளைச்சலுக்கான முக்கிய தொழில்நுட்பங்களை இங்கே விரிவாக பார்ப்போம்.

**1) இரகத்தேர்வு (VARITY SELECTION)**

சாகுபடி செய்யப்படும் வட்டாரம், நிலத்தின் மண்ணின் தன்மை, ரகத்தின் பண்புகள், நிலவும் தட்பவெப்ப நிலை பொறுத்து ரகங்களை தேர்வு செய்து விதைக்க வேண்டும். அந்த வகையில் எண்ணற்ற உயர் விளைச்சல் ரகங்கள் மக்காசோளத்தில் உள்ளன.

எடுத்துக்காட்டாக அட்வான்டா 741, 759, 751, 752 போன்ற ரகங்களும் பயோனீர், N.K VARITY, MAHYCO, AGRISIS போன்ற ரகங்களும் உள்ளன. வேளாண்மை துறையில் மானிய விலையில் ADV 752 இரகங்கள் பொது விதை வினியோக திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது குறிப்பிட்டதக்க தகவல்.

**2) விதை அளவு (SEED RATE)**

ஏக்கருக்கு 6 முதல் 8 கிலோ வரை விதைக்கப்படுகிறது. சில இடங்களில் விதை விதைக்கும் கருவி மூலமாகவோ அல்லது விதைப்பு, நடவு மூலமாக விதைக்கப்படுகிறது. விதைகளை விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

மக்காசோள பயிர் மித வெப்ப மண்டல பயிர். இது விதைப்பு களைஎடுப்பு, அறுவடை போன்ற பணிகள் அனைத்துமே இயந்திரங்களின் உதவியால் நடைபெறுவது குறிப்பிட்ட தக்கது.

**3) உழவு (PLOUGHING)**

சட்டி கலப்பை கொண்டு கோடையில் உழது பின் பல்லு கலப்பை பயன்படுத்தி இரண்டு உழவு எதிர் எதிராக போட வேண்டும். மக்காசோள பயிருக்கு ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழுஉரம்/ ஆட்டு கிடை போன்றவற்றை இடவேண்டும்.

விதைப்பிற்கு முன்னதாக படைப்புழுவைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு (NEEM CAKE) இடவேண்டும்.

**அடியுரமிடல் (BASAL DRESSING)?**

ஏக்கருக்கு அடியுரமாக 50 முதல் 55 கிலோ யூரியா, சூப்பர் 180 கிலோ, பொட்டாஷ் 50 கிலோயுடன் 5 கிலோ M.N.MIX-TURE FOR MAIZE இடவேண்டும். DAP உரத்தை பயன்படுத்த விரும்பினால் சூப்பர் பாஸ்பேட்க்கு பதிலாக 65 கிலோ/ ஏக்கர் இடலாம். அவ்வாறு டி.ஏ.பி இடும் போது யூரியாவின் அளவை மூன்றில் ஒரு பங்காக குறைத்து கொள்ளலாம்.

**4) பயிர் இடைவெளி (SPACING)**

வரிசைக்கு வரிசை இரண்டு அடி செடிக்கு செடி ஒரு அடி / ஒன்றை அடி இடைவெளி விட வேண்டும். விதைகளை ஆழமாக விதைக்காமல் 2 - 4 இன்ச் ஆழத்தில் விதைக்க வேண்டும்.

**5) களை நிர்வாகம் (WEED MANAGEMENT)**

களைகளை கைக்களை / களைக்கொல்லி பயன்படுத்திட வேண்டும். விதைத்த 3 - 5 நாட்களுக்குள் அட்ரசின் (ATR AZINE) 1 கிலோ/ ஏக்கர் தெளிக்கலாம். ஊடுபயிராக பயறு வகை பயிரிட்டால் அட்ரசின்-க்கு பதிலாக பெண்டி மெத்தாலின் பயன்படுத்திட லாம். விதைத்த 7 நாட்களில் தப்பு விதைகளை (GAP FILLING) போட வேண்டும்.

25 நாட்களுக்குள் மீண்டும் ஒரு முறை களை எடுக்க வேண்டும். களைக்கொல்லி தெளிப்பதாக இருந்தால் (TEMBOTRIONE + ATRAZINE). (OR) TOPRAMEZONE + ATRAZINE) கலந்த தெளிக்கலாம். களைக்கொல்லி தெளிக்கும் போது மண்ணில் ஈரப்பதம் இருக்க வேண்டும்.

**மேலுரம் (TOP DRESSING)**

விதைத்த 25-30 நாட்கள், 40-50 நாளில் மீதமுள்ள தழைசத்து உரத்தை (150 KG N) (யூரியா) வடிவில் இடலாம்.

**பயிர் வினை ஊக்கி தெளிப்பு**

மக்காசோள மஞ்சரி உருவான தருணத்தில் ஏக்கர் 3 கிலோ (TNAU - MAIZE MAZIM (மக்காசோள மேக்சிம் ஏக்கருக்கு 3 கிலோ கலந்து தெளிக்கலாம் மண்ணில் ஈரப்பதம் இருக்க வேண்டும்.

**பூச்சி / நோய் நிர்வாகம்**

பூச்சி / நோய் தாக்குதல் தென்பாட்டால் அருகேயுள்ள வேளாண்மை அலுவலகத்தை நாடவும். 1800-180-1551 என்ற கிசான் கால் சென்டரை அணுகி தகவல் பெறலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# தலைவாசல் வட்ட விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்பு குறித்து பட்டறிவு பயிற்சி




சேலம், செப்.23

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில் இருந்து 50 முன்னோடி விவசாயிகளை எடப்பாடி வட்டாரத்தில் உள்ள ராயல் தேனீ வளர்ப்பு பண்ணைக்கு அட்மா திட்டத்தில் அழைத்துச் செல்லப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன், தொடங்கி வைத்தார்.

அழைத்துச் செல்லப்பட்ட விவசாயிகளுக்கு ராயல் தேனீ வளர்ப்பு பண்ணை பயிற்சியாளர் ஸ்ரீனிவாசன், தேனீக்களை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்க பயிற்சி அளித்தார்.

வேளாண்மை அலுவலர் கௌதமன், விவசாயி களுக்கு எந்த வகையான தேனீக்களை எவ்வாறு வளர்ப்பது என்பது குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை ஆத்மா திட்ட அலுவலர்கள் சக்தி முத்துவேல் ரமேஷ் ஆகியோர் செய்தனர்.



# கொடுமுடி வட்டாரத்தில் ஒருங்கிணைந்த பண்ணையம் பற்றிய உள் மாநில அளவிலான கண்டுனர் சுற்றுலா




ஈரோடு, செப்.23 வேளாண்மைத் துறையின் கீழ், செயல்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் கொடுமுடி வட்டாரத்தில் உள் மாநில கண்டுனர் சுற்றுலா திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு விவசாயிகளை அழைத்து செல்லப்பட்டது.

அங்கு பேராசிரியர் மற்றும் தலைவர் தனுஷ்கோடி, வேளாண் அறிவியல் நிலைய செயல்பாடுகள் பற்றியும் ஒருங்கியைந்த பண்ணை பற்றியும் கூறினார். பேராசிரியர் பெரியார் ராமசாமி, ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பது பற்றியும் அதனை செயல்படுத்தும் முறைகள் பற்றியும் கூறினார். மேலும் அங்கு செயல்படுத்தும் ஒருங்கிணைந்த பண்ணைய மாதிரி அமைப்புகளை காட்டி தெளிவாக விளக்கி கூறினார்.

மேலும் டாக்டர் சபாபதி, கால்நடைகளுக்கு தீவன தயாரிக்கும் முறைகள் மற்றும் பரன்மேல் ஆடு வளர்ப்பு பற்றியும் தெளிவாக கூறினார். பேராசிரியர் திலகவதி, ஒருங்கிணைந்த பண்ணை யத்தில் பூச்சி மற்றும் நோய்களை கட்டுபடுத்தும் முறைகள் பற்றியும் இயற்கை விவசாய இடுபொருள் தயாரிக்கும் பற்றியும் கூறினார்.

மேலும் அங்கு செயல்படுத்தப்பட்டு வரும் மண்புழு உர தயாரிப்பு கிடங்கு மற்றும் பஞ்சகாவிய, மீன் அமிலங்கள் தயாரிக்கும் முறைகள் பற்றி செயல்விளக்கம் காண்பிக்கப்பட்டது. இந்த கண்டுனர் சுற்றுலாவிற்கு வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அலுவலர்கள் அழைத்து சென்றிருந்தனர்.

# நெற்பயிரில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பூச்சி மேலாண்மை குறித்த பண்ணைப்பள்ளி




மதுரை, செப்.23

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரம், வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் தண்டலை கிராமத்தில் 23.09.26ம் தேதி அன்று நெற்பயிரில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பூச்சி மேலாண்மை குறித்த பண்ணைப்பள்ளி நடைபெற்றது.

இப்பண்ணைபள்ளியில் 25 நெற்பரிடும் முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர். இப்பண்ணைபள்ளியில் அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெ.தெய் வேந்திரன், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பூச்சி மேலாண்மை மூலம் இரசாயண உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தலின் முக்கியத்துவம் மற்றும் சமச்சீரான உரப் பயன்பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலையான வேளாண் மையை ஊக்குவித்தல், விதை நேர்த்தி, வரப்பு பயிர்கள் பயிரிடுதல், பசுந்தாள் உரப்பயன்பாடுகள் பயிரிடுதல் மூலம் மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் குறித்து விவசாயி களுக்கு எடுத்துரைத்து அனைவரையும் வரவேற்றார். மேலும் மதுரை மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி / திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சுரேஷ், ஒருங் கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை முறை களான தழைச் சத்து, சாம்பல்சத்து, மணிச்சத்து முறைகள், இரண்டாம் துணை நிலை சத்துக்கள், நுண்ணூட்டச்சத்துகள் எவ்வாறு பயிர்களுக்கு இடுவது குறித்த தொழில்நுட்பங்கள், ஊட்டசத்து பற்றாக் குறைகள் மற்றும் அதன் நிவர்த்தி முறைகள், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளான பசுந்தாள் உரமிடுதல் பயன்பாடுகள், பஞ்சகாவ்யம், மீன் அமினோ அமில கரைசல், மஞ்சள் வண்ண அட்டை, விளக்கு பொறி, இனக் கவர்ச்சி பொறி, வேப்பங்கொட்டை கரைசல் தெளிப்பு, விளக்கு பொறி, இயற்கை திரவ உயிர் உரங்களான திரவ அசோஸ்பைரில்லம்,

பாஸ்போபாக்டீரியா ரைசோபியம், இரசாயண உரங்களின் பயன்பாட்டு முறைகள் குறித்தும், முக்கியமாக விவசாயிகள் அனைவரும் சான்று பெற்ற விதைகளை பயன்படுத்தி குறைந்த செலவில் அதிக மகசூல் பெற்றிடலாம் என தொழில்நுட்பக் கருத்துக்களை விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைத்து விவசாயிகள் கேட்ட அனைத்து கேள்விகளுக்கும் உரிய விளக்கமளித்தார்.

அலங்காநல்லூர் வட்டார வேளாண்மை அலுவலர் மு.வசந்த குமார், வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள இடுபொருட்களின் மானிய விவரங்கள் மற்றும் விவசாயிகளின் தனித்துவ அடையாள எண், நம்ம வயல் செயலி மூலம் விவசாயிகள் பயிரிடுதலை துல்லியமாக கணக்கிடும் முறைகள், பண்ணை இயந்திரங்களின் மானிய விபரங்கள், பாரத பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம், நுண்ணீர்ப் பாசன திட்டம், மத்திய மாநில அரசின் மூலமாக கிடைக்கும் மானியத் திட்டங்கள் பற்றி எடுத்துக்கூறினார்.

பண்ணைப்பள்ளியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப உரையாற்றிய அலுவலர்களுக்கும் அலங்கா நல்லூர் வட்டார தொழில்நுட்ப மேலாளர் வேல்முருகன் நன்றி கூறினார். பண்ணைப்பள்ளிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சௌந்தராஜன் மற்றும் வசந்தி ஆகியோர் செய்திருந்தனர்.

## மண் வளப் பாதுகாப்பு மற்றும் சமச்சீர் உரப் பயன்பாடு குறித்த களப்பயிற்சி



மதுரை, செப்.23

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில் மண்வளப் பாதுகாப்பு மற்றும் சமச்சீர் உரப் பயன்பாடு குறித்த களப்பயிற்சி மேலவளவு கிராமத்தில் 23/09/26 அன்று நடத்தப்பட்டது. இப் பயிற்சியில் மண் மாதிரி சேகரித்தல், மண் பரிசோதனையின் முக்கியத்துவம், உயிர் உரங்களை உபயோகித்தல் மற்றும் சமச் சீரான உரப் பயன்பாடு குறித்து வேளாண்மை அறிவியல் நிலையத்தின், வேளாண் விரிவாக்கத்துறை தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் கு.செல்வராணி விளக்கம் அளித்தார். இப்பயிற்சியில் மேலவளவு கிராமத்தைச் சேர்ந்த 30 விவசாயிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர். ஐ.பி.எல் பயிற்சி மாணவர் ரவிராஜா பயிற்சியை ஒருங்கிணைத்தார்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# மாபெரும் நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்

கோயம்புத்தூர், செப்.23

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலையில் மாபெரும் இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி சரவணன், தலைமை வகித்து நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி மற்றும் சாகரிகா திரவ உரங்களை பயன்படுத்துவதால் பெறும் நன்மைகள் மற்றும் இத்திரவ உரங்களை இலைவழி தெளிப்பு முறையில் பயன்படுத்தும் முறை குறித்து விவரித்தார்.



குருணை உரங்களைவிட விலை குறைவு, எடுத்து செல்வதும் சுலபம். மேலும், நானோ உரங்களை ட்ரோன் மூலம் தெளிக்கும் தொழில்நுட்பம் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. குறைந்த நேரத்தில், குறைந்த செலவில், துல்லியமாக உரங்களை தெளிக்க கிசான் ட்ரோன் எவ்வாறு பயன்படுகிறது என்பதையும், எதிர்கால வேளாண்மையில் இது முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

மேலும், இப்கோ சங்கட ஹரன் பீமா யோஜனா காப்பீடு திட்டம் – நானோ உரங்கள் வாங்கும் விவசாயிகளுக்கு ரூ.2,00,000 வரை விபத்துக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பது குறித்தும் விவரிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளும் தங்கள் பயிர்களில் இனி இப்கோ நானோ உரங்களை பயன்படுத்துவோம் என மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகள் கலந்துரையாடல் பயிற்சி



கடலூர், செப்.23

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலத்தில், விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகள் கலந்துரையாடல் பயிற்சி 23.09.26 அன்று நடைப்பெற்றது.

இப்பயிற்சியில் கம்மாபுரம், வேளாண்மைஉதவி இயக்குநர் (பொறுப்பு), சுபா, வரவேற்புரையாற்றினார். மேலும் இப்பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, கே.வி.கே வின் முக்கிய செயல்பாடுகள் பற்றியும், காலநிலைக் கேற்ற வேளாண்மை மூலம் எல்.நினோவிளைவு குறித்தும், சம்பா பருவத்திற்கான சமீபத்திய நெல் இரகங்கள் மற்றும் நேரடி விதைப்பு நெல்லுக்கான தொழில்நுட்பம், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்து பயிர்களின் சமீபத்திய இரகங்கள், உற்பத்தி முறைகள் பற்றியும், உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளைக் கொண்டு விதை நேர்த்தி செய்யும் முறைகள் பற்றியும், மேலும் தானியங்கள், சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துத்துகளில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பற்றியும், TNAU நிலக்கடலை ரிச் மற்றும் பயறு ஒண்டர் ஆகியவற்றின் இலைவழித் தெளிப் பின் முக்கியத்துவம் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்.

மேலும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, ஒருங் கிணைந்த களை மேலாண்மை மற்றும் ஊட்டச்சத்தின் முக்கியத் துவம், பசுந்தாள் உரம் இடுவதன் மூலம் மண் ஆரோக்கியம் பற்றியும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், கடலூர் மாவட்ட திட்ட இயக்குநர் அமிர்தராஜ், மத்திய, மாநில திட்டங்கள் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியில் விஞ்ஞானி முனைவர் சத்திய நாராயணன், விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றி தெளிவாக விளக்கினார். மேலும் முனைவர் க.கலைச்செல்வி (உழவியல் துறை), உழவியல் தொழில்நுட்பங்கள் மற்றும் இயற்கை விவசாயம் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். மேலும் முனைவர் சு ஜெய்வேலு, வேளாண் தொழில்நுட்ப இணையதளம் மற்றும் TNAU அக்ரி கார்ட் பற்றி விளக்கினார். மேலும் வேளாண்மை அறிவியல் நிலைய முனைவர் கண்ணன் மற்றும் முனைவர் கமலகண்ணன் இப்பயிற்சியில் கலந்துக் கொண்டனர். மேலும் விஞ்ஞானிகளுக்கும், விவசாயிகளுக்கும் இடையே கலந்துரையாடல் நடத்தப்பட்டு, விவசாயிகளின் சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. மேலும் இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், கம்மாபுரம் வட்டாரத்தை சேர்ந்த 45க்கும் மேற்பட்ட சேர்ந்த விவசாயிகள் கலந்துக் கொண்டனர்.

# இப்கோ – சங்கட ஹரன் பீமா யோஜனா– விவசாயிகள் இலவச விபத்துக் காப்பீட்டு திட்டம்

சென்னை, செப்.23

இப்கோ – சங்கட ஹரன் பீமா யோஜனா என்பது விவசாயிகள் பாதுகாப்பை முன்னிறுத்தி உருவாக்கப்பட்ட இலவச விபத்துக் காப்பீட்டு திட்டமாகும். இத்திட்டம் மூலம், இப்கோ நானோ உரங்கள் மற்றும் குருணை உரங்களான (யூரியா, டி.ஏ.பி, காம்ப்ளக்ஸ்) பயன்படுத்தும் விவசாயிகள் விபத்துக் காப்பீடு பெறும் வாய்ப்பு பெறலாம்.




## காப்பிட்டு தொகைரு

ஒரு நானோ பாட்டில் (நானோ யூரியா அல்லது

அல்லது நானோ டி.ஏ.பி வாங்கினால் ரூ.10,000 மதிப்புள்ள விபத்துக் காப்பீடு வழங்கப்படுகிறது. ஒரு வருடத்திற்கு அதிக பட்சம் 20 பாட்டில் வரை வாங்கி, ஒரு விவசாயி வருடத்திற்கு அதிகபட்சம் ரூ.2,00,000 வரை காப்பீடு பெறலாம்.

இத்தகைய திட்டம், விவசாயிகளை நவீன நானோ உரங்களை பயன்படுத்த ஊக்கப்படுத்துவதோடு, அவர்களின் வாழ்வாதாரத் திற்கும் பாதுகாப்பளிக்கின்றது. எனவே, விவசாயிகள் நானோ உரங்களை வாங்குவதன் மூலம் சிறந்த மகசூலுடன் பாதுகாப்பும் பெற்றுக் கொள்ளலாம்.




# விவசாயிகள் மற்றும் விதை விநியோகஸ்தர்கள் இருப்பு வைத்துள்ள விதைகளை பரிசோதனை செய்து கொள்ள அழைப்பு

ஊட்டி, செப்.23

நீலகிரி மாவட்ட விவசாயிகள் மற்றும் விதை விநியோகஸ்தர்கள் தாங்கள் இருப்பு வைத்துள்ள விதைகளை உதகை, ரோஸ் கார்டன், தோட்டக்கலை இணை இயக்குநர் வளாகத்தில் அமைந்துள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரியை கொடுத்து விதைப்பரிசோதனை செய்து கொள்ளலாம்.

இந்நிலையத்தில் விதையின் தர நிர்ணய காரணிகளான முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் போன்றவை பரிசோதனை செய்யப்படுகின்றன. ஒரு விதை மாதிரிக்கு ரூ.80/- மட்டுமே பரிசோதனைக் கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் இரகம், குவியல் எண் ஆகியவை குறித்த விபரச் சீட்டுகளை கொடுத்து, விதையின் தரத்தை அறிந்து கொள்ளலாம்.

விதைப்பரிசோதனைக்கு சமர்ப்பிக்க வேண்டிய பிரதான காய்கறிகளுக்கான விதை மாதிரியின் குறைந்தபட்ச அளவு பின்வருமாறு : கேரட், காலிப்ளவர், முட்டைகோஸ், ப்ரொக் கோலி, நூல்கோல் மற்றும் டர்நீப் 10 கிராம், பீட்ரூட் மற்றும் முள்ளங்கி 50 கிராம், பீன்ஸ் 450 கிராம், பட்டாணி 250 கிராம், பாலக்கீரை 25 கிராம் ஆகும்.

இவ்வாறு பயிருக்கேற்ப குறைந்தபட்ச விதை மாதிரியை உதகை, விதைப்பரிசோதனை நிலையத்தில் கொடுத்து விதைப் பரிசோதனை செய்து விதையின் தரத்தை அறிந்து விதைப்பதன் மூலம் தரமற்ற விதையினால் ஏற்படும் தேவையற்ற செலவுகளை தவிர்த்துக் கொள்ளலாம் என எஸ்.நவீன், வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், உதகை அறிவுறுத்தினார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# பெருந்துறை வட்டாரத்தில் விவசாயிகள் மேளா



ஈரோடு, செப்.23

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம், வேளாண்மை உழவர் நலத்துறை, மூலம் செயல் படுத்தப்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் காஞ்சிகோயில் வருவாய் கிராமத்தில் விவசாயிகள் மேளா குறித்த பயிற்சி 23.09.26 அன்று பெருந்துறை வேளாண்மை அலுவலர் மா.செந்தில் செல்வி தலைமையில் நடைபெற்றது. மேலும் பேசுகையில் துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் வேளாண் கிடங்கில் இருப்பில் உள்ள உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டம் பெற விரும்பும் விவசாயிகள் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் பற்றி சிறப்புரையாற்றினார். வேளாண் அலுவலர் நடமாடும் மண் பரிசோதனை நிலையம் ாலினி, பேசுகையில் மண் மற்றும் நீர் மாதிரி சேகரிக்கும் முறை பற்றிய செயல் விளக்கமும் அவற்றை பயன்படுத்தும் முறை பற்றியும் எடுத்து கூறினார். தோட்டக்கலை உதவி இயக்குநர் வினோதினி, பேசுகையில் தேனீ வளர்ப்பு மற்றும் மரக்கன்றுகள் விநியோகம் பற்றிய விவரங்களையும், துறை சார்ந்த திட்டங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். சக்தி சர்க்கரை ஆலையின் ஆராய்ச்சி மற்றும் மூத்த மேலாளர் ஸ்ரீதர், பேசுகையில் கரும்பு நாற்று தயார் செய்யும் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றியும், நல்ல தரமான விதைக் கரணை தேர்வு மற்றும் பயிர் சாகுபடி முறைகள் பற்றியும் பூச்சி, நோய் தாக்குதல் முறை பற்றியும் அவற்றை கட்டுப்படுத்தும் முறை பற்றியும் ஒரு பரு கரணை நடவுசெய்வதன் மூலம் ஏற்படும் நன்மைகள், நீடித்த நிலையான கரும்பு சாகுபடியில் இயந்திரமய மாக்குதலின் மானிய விவரங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். இந்த விவசாயிகள் மேளாவில் வேளாண்மை துறையின் மூலம் நுண்ணீர் பாசனத் திட்டம், கண்காட்சி திடல்கள் அமைக்கப்பட்டது. இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை கரும்பு ஆய்வாளர், உதவி கரும்பு ஆய்வாளர்கள், உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ஆகியோர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர். இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.


Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன்
கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
தரச் சான்றிதழ் பேப்பரில் மட்டுமல்ல பைப்பிலும்
Rithvik Pipe
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741